# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

### உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 234/2023 | அரசு தரப்பு | அ.சா.2 |
| பெயர் | ஆண்டு ஜோசப் | தந்தை பெயர் | ஜோசப் |
| வயது | 47 | முகவரி | வால்பாறை |

**தேதி: .13.10.2025**

**முதல் விசாரணை**

நான் வால்பாறையில் வசித்து வருகிறேன். நான் ஹார்டுவேர் கடை வைத்து நடத்தி வருகிறேன்.2018 ஆம் ஆண்டு தேதி மாதம் நினைவில்லை. காலை சுமார் 11 மணியளவில் பக்கத்து கடையான எனது கடையில் இருந்தபோது பக்கத்து கடையில் சத்தம் கேட்டது அது எனது அண்ணனின் கடையாகும் நான் உள்ளே சென்று பார்த்தேன். அப்போது அவரது கடையில் கண்ணாடி உடைந்து காணப்பட்டது. எனது அண்ணன் புகார் கொடுக்க சென்றபோது நானும் சென்றேன். எனது அண்ணனின் கடையை யார் உடைத்தார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள் எனக்கு யார் என தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் தற்போது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் அவரிடம் கூறினேன்.

அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது குடும்பத்துடன் வால்பாறை மெயின் ரோட்டில் உள்ள எனக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 12 வருடங்களாக அதே விலாசத்தில் சொந்தமாக ஹார்டுவேர் கடை வைத்து நடத்தி வருவதாகவும், எனக்கு திருமணமாகி 4 வயதில் ஒரு மகன் உள்ளதாகவும் எனது மூத்த அண்ணன் லாலூ என்பவர் எனது கடைக்குஅருகில் பாபு ஸ்டோர் என்ற பெயரில் ஸ்டேசனரி ஷாப் வைத்து நடத்தி வருவதாகவும் 05.04.2018 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் அண்ணன் லாலூ அவரது கடையை திறந்துகொண்டிருந்ததாகவும் அந்த சமயத்தில் DMK கட்சியை சேர்ந்தவர்கள் வால்பாறை காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக ஒன்று சேர்ந்ததாகவும் அப்பொழுது அந்த கூட்டத்தில் இருந்த DMK கட்சியை சேர்ந்த சௌந்தரபாண்டி என்பவர் வால்பாறையில் எந்த கடையும் திறக்ககூடாது பாபு ஸ்டோர் கடையை மட்டும் ஏன்டா திறந்தான் அவன் கடையை அடித்து நொறுக்குங்கடா என்று சொன்னதாகவும் அப்போது சவுந்திர பாண்டியுடன் இருந்த எனக்கு ஏற்கனவே நன்றாக தெரிந்த வால்பாறை DMK கட்சியை சேர்ந்த D.S.செந்தில்குமாரும் முருகாளி எஸ்டேட்டை சேர்ந்த அருண்குமார் என்பவரும் என் கடைக்கு முன்னாடி கிடந்த கல்லை எடுத்து இருவரும் மாறி மாறி கடைக்கண்ணாடியை உடைத்தாகவும் இதை நானும் எனது அண்ணனும் அருகில் இருந்த ரமேஷ், எனது அண்ணன் மகன் ஆலன், ஏசுதாஸ் ஆகியோரும் சேர்ந்து ஏன் இப்படி என் கடை கண்ணாடியை உடைக்கறீங்க என்று சத்தம் போட்டதாகவும் அதற்கு அவுங்க மூன்று பேரும் சேர்ந்து எங்களை எதிர்த்து கேட்கிற அளவுக்கு தைரியம் வந்துடுச்சாடா தாயோலி, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று

மிரட்டியதாகவும் நானும் எனது அண்ணனும் என்னுடன் இருந்த ரமேஷ், ஆலன், ஏசுதாஷ் ஆகியோரும் சேர்ந்து உயிருக்கு பயந்து தப்பித்து ஓடிவிட்டதாகவும், என் கடையில் பொருத்தியிருந்த கண்ணாடியின் மதிப்பு சுமார் ரூ.70,000/- இருப்பதாகவும் எனவே எங்களை கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்து கடையின் கண்ணாடியை உடைத்த செந்தில்குமார், அருண்குமார் ஆகியோரின் மீதும் இச்சம்பவத்தை தூண்டியவரான சௌந்தரபாண்டியன் என்பவர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு புகார் செய்ததாகவும் மேலும் 09.05.2018 ம் தேதி எனது அண்ணன் லாலு எனது கடைக்கு வந்து அவரது கடையில் உடைந்த கண்ணாடியை சரி செய்ய வேண்டி 5 மில்லிமீட்டர் அளவுள்ள 5 கண்ணாடிகள் அவற்றின் மதிப்பு ரூ.50,000/- உட்டன் பீடிங் ரூ.5,000/- அலுமினிய சேனல் ரூ.15,000/-த்திற்கும் ஆக மொத்தம் ரூ.70,000/-த்திற்கு தேவையான பொருட்கள் வாங்கியதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி